137

137

நவீன முஸ்லிம் ஸீரீஸ் நெ. 2.

தௌலத்

பொருளாதாரச்
சீர்திருத்தம்

T. A. முஹம்மது இப்ராஹீம்
இயற்றியது

17 APR

முதற் பதிப்பு.

1947.

பிரசுரம்
நவீன முஸ்லிம் புக் டிபோ.
இப்ராஹீம் பிரஸ்
... ஹைரோட், திருவலலிக்கேணி
மதராஸ் 5

அணா 8.

Q7:4
N47
111749

துஆகன்ஜுல் அர்ஷ்
தமிழ்

அரபியும் சேர்ந்தது

இதில் (1) துஆகன்ஜுல் அர்ஷ், (2) துஆ ஜயாமில் பீழ், (3) துஆஉல் அர்ஷ், (4) துஆ கத்ஹ, (5) உம்முஸ்ஸலவாத், (6) தருதேசாஜ், (7) அஹது நாமா. (8) அஸ்மாஉல் ஹுஸ்னா (9) அஸ்மாஉந் நபி,(ஸல்) (10) அஸ்மாயெ மஹ்பூப் ஸுபுஹானி (ர) (11) அவுறுதுஸ் ஸுல்தான் அஷ்ஷைகு அப்துல் காதிரில்ஜீலானி (ரழி) ஆகிய துஆக்களும் அஸ்மாக்களும், அவ்றுது களும் அடங்கி இருக்கின்றன.

மேற்கண்ட துஆ அஸ்மாக்களை ஓதுவதன் ஒழுங்குகளையும் பலன்களையும் விபரமாக எழுதப்பட்டிருக்கின்றன.

இதன் விலை அணா 12

முனாஜாத்தே குத்பியா

—:O:—

பீஹுப்பி ஸையிதினா மாலை, யாகுத்பா மாலை, யாஸையிதி மாலை, யாஸையிதி ஷைக்கி மாலை, வஸீலா மாலை, பதால் மாலை, ஹுஸைன் மாலை முதலியவை அடங்கியுள்ளது.

விலை அணா 6

நவீன முஸ்லிம் புக் டிபோ,

இப்றாஹீம் பிரஸ்

571/H, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

நவீன முஸ்லிம் ஸீரீஸ் நெ. 2

தௌலத்

(பொருளாதாரச் சீர்திருத்தம்)

T. A. முஹம்மது இப்ராஹீம்

இயற்றியது.

முதற் பதிப்பு

பிரசுரம்:

நவீன முஸ்லிம் புக்டிபோ.

இப்ராஹீம் பிரஸ்

571/H, ஹை ரோட், திருவல்லிக்கேணி,

மதராஸ்.

காப்பி ரைட்] 1947 [அணா 8

முகவுரை

எமது நவீன முஸ்லிம் (சமூக சீர்திருத்தம்) நன்கு வரவேற்கப் பட்டது. அறிஞர் பலர் அப் புத்தகத்தைப் புகழ்ந்தனர். இதைப்போன்ற புத்தகங்கள் இன்னும் பல வெளிவரவேண்டு மென்று விரும்பினர். அவர்க ளின் விருப்பத்தை நிறைவேற் றவே இந்த 'தௌலத்' எனும் நூல் வெளியிடப்பட்டது.

பணம் பிரதானம். நம் சமூ கம் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய வேண்டும். மற்றச் சமூகத்தினர்க்குச் சம மாக வாழவேண்டும். அதற் கான மார்க்கங்களைச் சொல்வதே இந்நூலின் முழு நோக்கம். இந் தக் கொள்கைகளை நம் சமூகத்தி னர் வாழ்க்கையில் கடைப்பிடித் தொழுகுவார்களே யாயின் அது வே நாம் கோரும் பரிசு ஆகும். இதனை நம் சகோதரர்கள் வழங்கு வார்களா?

ஆக்கியோன்.

முனாஜாத்தே பாத்திமா

9 முனாஜாத்துகளடங்கியது

(1) நபி நாயகம் மவர்கள்பேரில் யானை யிதி மாலை, (2) திருப்புகழ் காஸீம் புலவர் பாடிய (முன்னவனே அஹதியத்தாய்) இன்னிசை, (3) பாத்திமா நாயகிமீது தலைபாத்திஹா, (4) ஷை முத்துமணி மாலை, (5) ஷை நாயகி மாலை, (6) முஹீயித்தீன் முனாஜாத்து, (7) நாகூர் மீரான் சாஹிபு முனாஜாத்து, (8) காஜா பந்தே நவாஸ் முனாஜாத்து, (9) ஸலவாத்துப் பாட்டு ஆகிய முனாஜாத்துகளடங்கியது. விலை அணா 8

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்

நவீன முஸ்லிம் புக் டிபோ

இப்ருஹீம் பிரஸ்

571/H, ஹைரோட்டு, திருவல்லிக்கேணி, மதருஸ்

தௌலத்

ஆண்டவன் இவ்வுலகத்தை ஆட்சிபுரிய கல்விச் செல்வத்தையும், பொருட் செல்வத்தையும் அனுப்பியிருக்கிறான். ஆகவே இவ்வுலகத்தில் வதியும் மானிட வர்க்கத்தா ரனைவரும் அவ்விரண்டு செல்வங்களையும் அடையவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். அவ்விரண்டு செல்வங்களுமில்லாதவர்கள், அச்செல்வங்களை யுடையவர்களுக்கு அடிமைகளாகவும், அவர்களின் கைபொம்மைகளாகவு மிருக்க நேரிடும். சுயேச்சையாகவும், சுதந்திரமாகவும், கண்ணியமாகவும் வாழமுடியாது. செல்வம் ஆண்டவனால் அருளப்பெற்ற நன்கொடைகளிலொன்று. எளிமை அவனால் இறக்கப்பட்ட துன்ப மூட்டையாகும். ஆகவே தனவந்தர்கள் அநேகமாய் யாவராலும் மதிக்கப்படுகின்றனர். எளியவர்களோ அநேகமாய் யாவராலும் வெறுக்கப்படுகின்றனர்.

நம் சமுதாயத்தில் பெரும்பாலோர் எளியவர்களாயிருக்கின்றனர். அதற்குப் பல காரணங்களுண்டு. மார்க்கக் கட்டளைக்கு நேர்விரோதமாய் நடப்பதாலும், கல்வியறிவின்மையாலும் அனாசார பழக்கவழக்கங்களுக்கு அடிமையாயிருப்பதாலும், விதிப்படி நடக்கும் ஆண்டவன் விதித்தபடியாகட்டுமென்று அலக்ஷியமா யிருப்பதாலும் நம் சமூகத்தில் பெரும்பாலோர் எளியவர்களா யிருக்கின்றனர். அவர்கள் தங்களிடமுள்ள அபூர்வசக்தியை அறியாதவர்களா யிருக்கின்றனர்.

ஒருவன் தனவந்தனுயிருப்பதற்கும் தரித்திரனுயிருப்பதற்கும் (தக்திர்) விதிதான் காரணமென்பது பெரும்பாலோரின் அபிப்பிராயமாகும். அப்படியாயின் ஒருவன் பகுத்தறிவைக் கொண்டு சுயேச்சையாய் யாதொன்றையும் சாதிக்க முடியாது; விதித்த விதிப்படியே நடக்கக்கூடியவனுயிருக்கிறுன். ஆண்டவன் விதித்த விதிப்படியே மனிதனுல் நடக்க முடியுமேயன்றி அதைமீறி நடக்க முடியாதென்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. ஒருவன் புண்யம் செய்வானென்று விதித்திருந்தால் புண்யமான காரியத்தையே செய்வான். பாவம் செய்வானென்று விதித்திருந்தால் பாவக் கிரியைகளேயே செய்துவருவான். ஆண்டவன் விதித்த விதிப்படி (கட்டளேப்படி) ஒருவன் பாவக் கிரியைகளேச் செய்துவந்தால் ஆண்டவன் முன் அவன் எப்படிக் குற்றவாளியாக முடியும்? அவனுக்குத் தண்டனே எதற்கு? விதித்த விதியை மீறி நடக்க முடியாத நிலேமையிலுள்ளவர்களுக்கு குர்ஆன்—வேதக்கட்டளே எதற்கு? றஸூல்—தீர்க்கதரிசிகளெதற்கு? குதுபுமார்களெதற்கு? வலியுல்லாக்களெதற்கு? விதியை மீறி நடக்கச் சக்தியில்லாதவர்கள் வேதக் கட்டளேக் கிணங்க நடக்க முடியுமா? தீர்க்கதரிசிகளின் உபதேசங்களேத்தான் கேட்டுத் திருந்தமுடியுமா?

மனிதன் விதியை மீறி நடக்கமுடியாதவனுகப் படைக்கப்பட்டிருந்தால், ஆண்டவன் வேதங்களேயும், தீர்க்கதரிசிகளேயும், மற்றும் மஹான்களேயும் அனுப்பக் காரணமேயில்லே. ஆண்டவன் மனிதனுக்குச் சில சுதந்திரங்களேக் கொடுத்திருக்கிறுன். அச்சுதந்திரங்களேக்கொண்டு மனிதன் நினேத்த காரியங்களேச் சாதிக்க முடியும். ஆகவே "விதிப்படி நடக்கும்; நம்மால் என்னுகும்." எனக்கருதி, கல்விச் செல்வத்தையும், பொருட்செல்வத்தையும் சம்பாதிக்க

முயலாமல் அலக்ஷியமா யிருந்துகொண்டு ஆண்டவனைக் குறைகூறுவதில் பயனில்லை. சோம்பிக்குச் சோறுங்கிடைக் காது; சுவர்க்கமுங் கிடைக்காது" என்று ஒரு பழமொழி யுண்டு. பாடுபடச் சோம்புவதால் சோறு கிடைக்காது. ஆண்டவனை வணங்கச் சோம்புவதால் சுவர்க்கம் கிடைக்காது. பாடுபட்டால் கட்டாயம் பலன் கிடைக்கும். பாடுபடாமல் சும்மாவிருந்துகொண்டு, விதியிலிருந்தால்தான் பணம் சம்பா திக்க முடியுமென்றெண்ணுவது தவறு. அவ்வெண்ணத்தை மனதிலிருந்து வேரோடு களைந்துவிடுவது அவசியமாகும்.

மனமென்னும் நிலத்தில் (பொருள் சம்பாதிக்க வேண் டுமெனும்) எண்ணமாகிய விதையை விதைத்து, ஊக்கமெ னும் உரமிட்டு முயற்சியெனும் தண்ணீர் பாய்ச்சி ஆண்டவ னிடம் மன்றாடினால், அருள்மழை வருஷிக்கும். அச்சமயம் அவ்வெண்ணமெனும் வித்திலிருந்து முளைகிளம்பி கதி ரோங்கும். இடையிடையே முளைக்கும் சந்தேகங்களெனும் களைகளைப் பிடுங்கி எறிந்துகொண்டு வந்தால் பூத்துக் காய்த்து தனம் தருமென்பதில் சந்தேகமில்லை. விதையை விதைக்குமுன் நிலத்தைப் பண்படுத்துவதுபோல் முதன் முதல் மனதைப் பண்படுத்த வேண்டும். மனது திறமில் லாமல் யாதொரு காரியத்தையும் சாதிக்க முடியாது. "தைரி யமுடையவனிடம் தனம் தாண்டவமாடும்" எனும் முது மொழிக் கிணங்க பொருள் சம்பாதிக்க விரும்புவோர்களுக்கு மனோதைரியம் முக்கியமாக வேண்டும். அதாவது பகுத் தறிவில்லாத மிருகங்களிடத்திலும், பகுத்தறிவை யடையப் பெறாத சிறுவர்களிடத்திலும் சுபாவமாகத் தோன்றும் துணிச்சலான முரட்டு தைரியமல்ல. பணம் சம்பாதிக்க முயலும்போது பல கஷ்டங்கள் ஏற்படும். அக்காலங்களில் அதைரியப்படாமல் திடச் சித்தத்தை இழந்து விடாமல்

பொறுமையுடன் முயலும்படியான மனோதைரியம் வேண்டும். அனுசாரச் செலவெனும் வைதத்தான் பணப் பயிரை மேய்ந்து அழித்துவிடாமல் வைராக்யமெனும் வேலியை பலமாகத் தளையவேண்டும். மேற்கூறியபடி அநுஷ்டித்து வந்தால் பணத்தை ஏராளமாகச் சம்பாதித்துக் குவிக்கலாம்.

பணத்தைச் சம்பாதிப்ப தெப்படி ?

பணத்தைச் சம்பாதித்துக் குவிக்க முடியுமென்று சொல்லலாம்; எழுதலாம். எப்படிச் சம்பாதிக்க முடியுமென்று இதை வாசிக்கும் நேயர்கள் நினைக்கலாம். அன்றாடம் உழைத்து ஜீவனம் செய்பவர்களில் சிலர் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகைகளைச் சேமித்து வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுகிறோம். நம் கண்முன் ஏழைகளாயிருந்தவர்கள் தனவந்தர்களாயிருக்கக் காண்கிறோம். அவர்கள் அப்பணத்தை எப்படிச் சம்பாதித்தனர்? ஆண்டவன் இவ்வுலகத்தையும் அதிலுள்ள சகல வஸ்துக்களையும் மனிதனுக்காகவே படைத்திருக்கிறான். இவ்வுலகத்திலுள்ள சகல சம்பத்துகளும் மனிதனுக்கு உரிமையுடையவை. அந்த உரிமையை யடையும் சக்தியும் அவனிடத்திலேயே அமைந்திருக்கிறது. அச்சக்தியை யுபயோகித்து தத்தம் உரிமைகளை யடையாமலிருந்துகொண்டு "என் தலையிலெழுத்து இப்படியாச்சு—அப்படி யாச்சு; அவன் விதி அப்படி, இவன் விதி இப்படி" என்று சொல்லிக் கஷ்டப்படுவதில் பயனில்லை.

சக்கிமுக்கிக் கல்லுள் அக்கினி மறைந்திருப்பதேபோல் மனிதனுள் அச்சக்தி யமைந்திருக்கிறது. அதைச் சுபாவக் குணத்தால் அறியமுடியாது; அறிவின் குணத்தாலேயே

அறியமுடியும். சுபாவக்குணம் கடிவாளமில்லாத குதிரை போலும், சுக்கானில்லாத மரக்கலம்போலுமுள்ளது. அது உண்ணல், குடித்தல், உறங்கல், விழைதல் ஆகிய காரியங்களைச் செய்துகொண்டிருக்கும் பிராணிகளின் குணமாகும். அது ஆத்திரமும் அடங்காப் பிடாரித் தன்மையுமுடையது. நல்லது கெட்டதெனப் பரிசீலனை செய்யும் தன்மை யற்றது. ஒழுக்கக்கேடான பாதையில் நடக்கத் தூண்டுவது; ஆகவே சுபாவக்குணமுள்ளவர்கள் கடிவாள மில்லாத குதிரையிலும், சுக்கானில்லாத மரக்கலத்திலும் பிரயாணம் செய்பவர்களின் கதியை யடைவார்கள். அறிவின் குணம் தன்னையேதான் குற்றம் காணும் மனோ நிலைமை யுடையது. தன் கடமையைத்தான் சரிவரச் செய்யாதபோது தான் குற்றம் செய்துவிட்டதை யுணர்ந்து, தன்னையேதான் குற்றம் கூறிக்கொள்ளும் நிலைமையுடையது.

பெரியோர்கள் தருமம் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கும் சிறுவர்களும் தருமம் செய்கின்றனர். பெரியோர்கள் தருமம் செய்வதேபோல் தாங்களும் செய்யவேண்டுமென்ற விருப்பத்தாலேயே சிறுவர்கள் தருமம் செய்கிறார்களேயன்றி, தருமம் எதற்காகச் செய்கிறதென்பதை உணர்வதில்லை. இது சுபாவக்குணம். தருமம் செய்வதால் ஏழைகளின் கஷ்டம் ஒருவாறு நிவர்த்தியாகிறது; அவர்களின் பசிப்பிணி தீருகிறதென்றுணர்ந்து பெரியோர்கள் தருமம் செய்கின்றனர். இது அறிவின் குணம்.

ஒரு காரியத்தைச் செய்யப் புகுமுன் அது நல்லது-கெட்டது, அநுகூலமானது-பிரதிகூலமானது, நன்மையானது-தீமையானது, அதைச் செய்யலாம்-செய்யக்கூடாது என உணர்ந்து செய்வதே அறிவின் குணமாகும்.

அறிவின் குணத்தால் இவ்வுலகப் பொருட்களையும் ஆத்ம குணத்தால் அவ்வுலகப் பொருட்களையும் *அடையமுடியும்.

*சுபாவக்குணம், †அறிவின் குணம், ‡ஆத்மகுணம் ஆகிய முக்குணங்களைப்பற்றி எழுதப்புகின் இச்சிறியநூல் இடந்தராது.

செல்வச் சேமிப்பு

மனிதன் சாமான்யமான விருப்பங்களின் வழியே சென்றுவிடாது மனதைத் தனக்குக் கீழாகச் செய்து கொண்டால் நினைக்கும் காரியங்களைச் சுலபமாகச் சாதிக்க முடியும். மனிதவர்க்கத்தார் அனைவரும் பணத்தைச் சம்பாதிக்கின்றனர். ஆனால் அதை மனதின் சாமான்ய விருப்பங்களின் வழியே செலவு செய்துவிடுகின்றனர். இப்படிச் செலவுசெய்து கொண்டுவந்தால் பணத்தை எப்படிச் சேமிக்க முடியும்? ஏரிகளில் மழை பெய்வதேபோல்தான் தெருக்களிலும் மழை பெய்கிறது. தெருக்களில் பெய்த மழை ஜலம் கட்டுப்பாடின்றிச் சிதறிப் பல கால்வாய்களின் வழியாகச் சென்று கடல், ஆறு முதலியவைகளில் சேர்ந்துவிடுகிறது. ஆனால் ஏரிகளில் பெய்யும் மழை ஜலம் சிதறிப் போகாதபடி அணை கட்டப்பட்டு அந்த ஜலம் தேங்கி சேகரமாகிறது. அதேபோல் சம்பாதிக்கும் பணத்தை முழுதும் செலவு செய்துவிடாமல், அதில் ஒரு சிறு தொகையைச் சேமிக்கவேண்டுமென்று ஒரு திட்டம் போட்டு வேலை செய்தால் கட்டாயம் பணத்தைச் சம்பாதிக்க முடியும்.

---

* சுபாவக்குணம் = நப்ஸெ அம்மாரா.

† அறிவின் குணம் = நப்ஸெ லவ்வாமா.

‡ ஆத்ம குணம் = நப்ஸெ முத்ம இன்னா.

சம்பாதிக்கும் பணம் முழுதும் செலவுசெய்யாமல் மாத மொன்றுக்குப் பத்தில் ஒரு பாகத்தையேனும் சேமித்து வைக்கவேண்டும். சேமித்து வைக்கும் பணம் ஒரு மாதத்தில் நாலில் ஒரு பாகத்தைச் சம்பாதித்துத் தரும். அதாவது தொழிலுக்குரிய சாமான்களை மொத்த மாக வாங்குவதற்கும், சில்லறையாக வாங்குவதற்கும் வித்தி யாசமுண்டு. பத்து ரூபாய்க்கு வாங்கக்கூடிய சாமானைச் சில்லறை சில்லறையாக வாங்கினால் பன்னிரண்டரை ரூபா யாகும். சில்லறை சில்லறையாகப் பன்னிரண்டரை ரூபாய்க்கு வாங்கும் சாமானை மொத்தமாக வாங்கினால் பத்து ரூபாய்க்கு வாங்கலாம். சாமான்களை மொத்தமாக வாங்குவ தற்குப் பணம் வேண்டும். சம்பாதிக்கும் பணம் முழுதும் செலவுசெய்துகொண்டு வந்தால் சாமான்களை மொத்தமாக வாங்க முடியாது. ஆகவே சம்பாதிக்கும் பணத்தில் பத் தில் ஒரு பாகத்தைச் சேமித்துவைக்க முயலவேண்டும்.

தொழிலுக்குரிய சாமான்களை அவ்வப்போது வாங்கி உபயோகிப்பதால் தொழில் ஒழுங்காக நடைபெறாது. சிற் சில சமயங்களில் சாமான்கள் கிடைக்காது. சில சாமான் களைப் பண்படுத்தி உபயோகிக்க வேண்டியிருக்கும். அத னால் காலதாமதம் ஏற்படும். இத்தகைய காரணங்களால் தொழில் ஒழுங்கான முறையில் நடைபெறாமல் மந்தமாக நடக்கும். தொழில் மந்தமாக நடப்பதால் வருவாயும் குறையும். தொழிலுக்குரிய சாமான்களை மொத்தமாக வாங்குவதால் பண்படுத்தவேண்டிய சாமான்களை முன்னதா கவே பண்படுத்திவைத்துக்கொள்ள ஹேதுவாயிருக்கும். தொழிலுக்குரிய சாமான்கள் தயாரிவிருந்துகொண்டிருந் தால் தொழில் ஸ்தம்பிக்காமல் எப்பொழுதும் விரைவாக நடந்துகொண்டிருக்கும். தொழில் விரைவாக நடந்தால் வரு

வாயும் அதிகமாகும். பணத்தைச் சேமித்து வைப்பதால் மூன்றுவித அநுகூலமுண்டு. முதலாவது சேமித்து வைக்கும் பணம். இரண்டாவது அப்பணத்தைக்கொண்டு சாமான்களை மொத்தமாக வாங்குவதால் கிடைக்கும் ஆதாயம். மூன்றாவது சாமான்கள் தயாரிலிருப்பதால் தொழில் விரைவாக நடந்து அதனால் கிடைக்கும் அதிக வருவாய் ஆகிய மூன்றுவகை லாபமுண்டு.

வர்த்தகத்திற்கும், தொழிலுக்கும் மற்றும் எல்லா விஷயங்களுக்கும் பணம் முக்கியமாகத் தேவை. ஆகவே பணத்தைச் சேமித்து வைப்பதில் கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டியது அவசியமாகும். இந்தமாதம் போகட்டும் அடுத்த மாதத்திலிருந்து சேமிக்கலாமென்று எண்ணிக் கொண்டிருந்தால் அடுத்தமாதம் அடுத்த மாதமென மாதங்கள் போய்க்கொண்டே யிருக்கும். எந்தமாதமும் சேமிக்க முடியாது. ஆகவே இந்த மாதத்திலிருந்தே சேமிக்க வேண்டுமெனக் கருதி, சுருக்கவேண்டிய செலவுகளைச் சுருக்கி, சாமான்யமான விருப்பங்களின் வழியே மனதைச் செல்லவிடாமல் திடச்சித்தத்துடன் பணத்தைச் சேமித்து வைக்க முயலவேண்டும். முதன்முதல் சிறிது பணத்தைச் சேமிப்பதுதான் கஷ்டமாகத் தோன்றும். பிறகு மேற் சொன்னபடி பணம் பணத்தைச் சம்பாதித்துத்தரும்.

வருவாயும், செலவும்

இரு நூறு ரூபாய் வருவாயுள்ளவர்களுக்கு, சில சமயங்களில் நானூறு ரூபாய் வரும்படி வருகிறது. அச்சமயம் அவர்கள் எப்பொழுதும்போல் செலவு செய்துகொண்டு வந்தால் அதிகமாகக் கிடைத்த பணம் மிச்சப்படும். சாமான்களின் விலை சில சமயம் அதிகமாயிருக்கும்; சிலசமயம் விலை குறைவாயிருக்கும். மிச்சப்படும் பொருளைக்கொண்டு, விலை குறைவாயிருக்கும்போது சாமான்களை வாங்கிச் சேகரஞ் செய்துகொள்வதால் விலை ஏறும் சமயம் அதனால் மிக்க பலனுண்டாகும். இப்படியாகப் பலவகையிலும் ஆதாயங் கிடைக்கும்.

ஆனால், இரு நூறு ரூபாய் வருவாயுள்ளவர்களுக்கு நானூறு ரூபாய் வரும்படி வந்தால் அந்த ரூபாயைச் சேர்த்துவைக்கிறார்களில்லை. சுமார் பத்து கட்டுகளை ஒரு பர்லாங்கு தூரம் சுமந்துகொண்டு வந்து பஸ் ஸ்டாண்டில் வண்டி ஏறும் வழக்கமுடையவர்கள், இரண்டு கட்டுகளை அரைக்கால் பர்லாங்கு தூரம் கொண்டுபோக மனமில்லாதவர்களாய் அதற்கொரு கூலியாளையும், ரிக்ஷா வண்டியையும் தேடுகிறார்கள். பீடி பிடிக்கும் வழக்கமுடையவர்கள் சிகரெட்டுப்பிடிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். காலணா விலையுள்ள சிகரெட்டுப் பிடிப்பவர்கள் அரையணா விலையுள்ள சிகரெட்டுப்பிடிக்க ஆரம்பித்து விடுகின்றனர். நாளொன்றுக்கு மூன்று நான்கு சிகரெட்டுகள் பிடிப்பவர்கள் மூன்று நான்கு பேக் அதாவது முப்பது நாற்பது சிகரெட்டுகள் பிடிக்கவும் விநியோகிக்கவும் ஆரம்பித்துவிடுகின்றனர். நாலே முக்காலணா ஒன்பதரையணா வகுப்பில் ஸினிமா பார்க்கக் கூடியவர்கள் இரண்டேகால் ரூபாய் வகுப்பில் ஸினிமா

பார்க்க ஆரம்பித்துவிடுகின்றனர். உணவிலும், உடுமானத்திலும் அப்படியே. இப்படியாக மாதமொன்றுக்கு ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கும் தனவந்தர்கள் விளையாடும் 'கோதா' வில் இறங்கி விளையாட ஆரம்பித்துவிடுகின்றனர். வியாபாரம் எப்பொழுதும் ஒரே நிலையிலிருக்குமா? பழையபடி இருநூறு ரூபாய் வருவாய்வர ஆரம்பித்துவிடுகிறது. அச்சமயம் தாங்கள் செலவு செய்யும் உச்ச ஸ்தானத்தை விட்டு இறங்க மனமில்லாதவர்களாய் "உம்—இந்தமாதம் என்னவோ வியாபாரம் கொஞ்சம் மந்தமாயிருக்கிறது. அடுத்தமாதம் எல்லாம் சரிபட்டுவிடும்" எனக்கருதி நானூறு ரூபாய் விகிதத்தில் செலவு செய்கின்றனர். இருநூறு ரூபாய் அதிக செலவு செய்வதால் பணமுடை ஏற்படுகிறது. மொத்தமாக வாங்கக்கூடிய சாமான்களை சில்லறையில் அதிகவிலை கொடுத்து வாங்கச் சம்பவிக்கிறது. இங்ஙனம் செலவுசெய்து உள்ளதும்போய்க் கடன்காரர்களாகிக் கஷ்டப்படுகின்றனர்.

கடைசியாக "உடம்பு முழுதும் எண்ணெயைப் பூசிக் கொண்டு தெருவில் புரண்டாலும் ஒட்டுகிறமண்தானே ஒட்டும். இதுவெல்லாம் விதியின் விளையாட்டு" என்று வாய் வேதாந்தம் பேசுகின்றனர். வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்தால் கடன் ஏற்படுகிறது. அதற்கு ஆண்டவன் என்னசெய்வான்? விதி என்னசெய்யும்?

ஒட்டுமாஞ்செடியும், வியாபாரமும்.

சில ஆயிர ரூபாய்களைக்கொண்டு சிலர் வியாபாரத்தை ஆரம்பிக்கின்றனர். கொடுக்கல் வாங்கல் மூலம் பல ஆயிர ரூபாய்கள் புரளுகின்றன. வியாபாரத்தில் புரளும் ரூபாய்களெல்லாம் தங்கள் சொந்த ரூபாய்களல்ல. அநேகமாய் மற்ற வியாபாரிகளின் ரூபாய்கள். கையில் ரூபாய் நடமாட்டம் அதிகமானதும் அறிவின் குணம் மயங்குகிறது. சுபாவக்குணம் மேலாடுகிறது. சாமானிய விருப்பங்களின் வழியே செல்ல மனம் தூண்டுகிறது.

கையில் காசில்லாதவர்கள் கடன்வாங்கி, மார்க்கத்திற்கு முற்றும் விரோதமான அனாசாரச் சடங்குகளுக்குச் செலவு செய்யும்போது, கையில் காசு நர்த்தனமாடுகிறவர்களுக்குக் கேட்கவேண்டுமா என்ன? அவர்கள் அனாசாரச் சடங்குகளுக்கு மேன்மேலும் மெருகிட ஆரம்பித்துவிடுகின்றனர். மேளதாள கேளிக்கைகளுடன் சடங்குகளைச் செய்கின்றனர். அளவுகடந்த நகைகளைச் சமைக்க ஆரம்பித்துவிடுகின்றனர். உல்லாசப் பிரயாணங்கள், குதூஹல விருந்து முதலியவைகளில் அளவு கடந்த பணத்தை விரயஞ்செய்கின்றனர். அதுமாத்திரமா! சூதாடவும் முனைந்துவிடுகின்றனர். ஓடும் குதிரைகள் மீது ஆடும் ரூபாய்கள்தான் எத்தனை!

இவர்களின் படாடோபத்தை யறிந்த மற்ற வியாபாரிகள் தத்தம் பணத்தை வசூலித்துக்கொண்டு, கொடுக்கல் வாங்கலை நிறுத்திவிடுகின்றனர். அதனால் வியாபாரம் முறிந்து கடன்காரர்களாகிவிடுகின்றனர். கடைசியாக நகைகளை அடமானம் வைக்கின்றனர். சிலகாலம் அதற்கு வட்டி கட்டுகின்றனர். பிறகு அதுவும் கட்டமுடியாமல்

நகை மூழ்கிவிடுகிறது. இது விதியா? தக்தீரா? நஸீபா? கிரஹச்சாரமா? அல்ல, அல்ல. இது அநுசாரம்.

நகை சுமார் நாலாயிர ரூபாய்க்குச் செய்யப்பட்ட தென்று வைத்துக்கொள்வோம். அதை அடமானம் வைக்கப்போனால் ஆயிர ரூபாய்க்குமேல் கிடைக்காது. நாலாயிர ரூபாய் செலவில் செய்யப்பட்ட நகைக்கு முதல் கூலி தள்ளுபடியாகிவிடும். இரண்டாவது சவரன் ஒன்றுக்கு மூன்று குன்றிமணியிடை சேதாரமும் தள்ளுபடியாகிவிடும். மூன்றாவது பொடிவைத்துப் பற்றவைத்திருப்பதால் அதற்கு வேறு தள்ளுபடியாகும். நான்காவது கற்களிழைக்கப்பட்டிருந்தால் அவைகளுக்கு மதிப்பு கிடையாது. இப்படியாக அந்த நாலாயிர ரூபாய் நகை இரண்டாயிர ரூபாயே மதிக்கப்படுகிறது. இரண்டாயிர ரூபாய் மதிப்புள்ள நகையை அடமானம் வைத்தால் ஆயிர ரூபாய்தான் கிடைக்கும். அந்த ரூபாய்க்குச் சிலகாலம் வட்டிக் கட்டிக்கொண்டு வருகின்றனர். நகைமீது வாங்கின ரூபாய் ஆயிரத்தையும் அநேகமாய் வட்டியாகவே கொடுத்துவிடுகின்றனர். பிறகு வட்டியும் கொடுக்கமுடியாமல் நகை மூழ்கிவிடுகிறது.

இது எத்துணை விந்தையான சம்பவம் பாருங்கள். நகைமீது வாங்கின ரூபாய் ஆயிரத்தையும் வட்டியாகக் கொடுத்துவிட்டு நகையையும் இழந்துவிடுகின்றனர். அதாவது நகையைச் சமைத்து மார்வாரிக்கு தத்தம் செய்துவிடுகின்றனர்.

ஒரு காரியத்தைச் செய்யப்புகுமுன் அது நிலைக்குமா, நிலைக்காதா வென யோசித்துச் செய்யவேண்டும். அப்படி யோசித்துச் செய்தால் இத்தகைய சம்பவங்

கள் நேரிடா. நாம் செய்யும்படியான வியாபாரத்தி லிருந்து சிறிது ரூபாய்களை எடுத்து நகை செய்தால் வியாபாரம் தடைபடாமல் ஒழுங்காக நடக்குமா அல்லது வியாபாரம் தடைபடுமா வென யோசிக்கவேண்டும். அதனுல் வியாபாரம் தடைபடாது, எப்பொழுதும்போல் நடைபெறுமென் றுணர்ந்தால் நகை செய்யலாம். அதனுல் வியாபாரம் தடைபடுமென்றுணர்ந்தால் நகை செய்யக்கூடாது.

ஓர் ஒட்டுமாஞ்செடியை நட்டுவித்த முதல் வருடமே அது பூக்க ஆரம்பித்துவிடுகிறது. அதைக் காய்க்கவிட்டால் அச்செடி தாங்காது முறிந்துவிடும். ஆகவே அச்செடி மரமாகும்வரை பூக்களை உதிர்த்துக்கொண்டு வருகின்றனர். அது வலுவடைந்து காய்களைத் தாங்கும் சக்தியுண்டான பிறகே பூக்களை உதிர்க்காமல் காய்க்க விடுகின்றனர். அதே போல் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து, கையில் காசு பழக்கம் ஏற்பட்டால், நகை சமைக்கவேண்டும்; வீட்டைப் புதுப்பிக்கவேண்டும்; பட்டுப்பணிகளை யணியவேண்டும்; வாகனங்களை வாங்கவேண்டு மெனும் பூக்கள் பூக்கும். அதைக் காய்க்கவிட்டால் வியாபாரமெனும் செடி முறிந்துவிடும். ஆகவே வியாபாரமெனும் செடி மரமாகி வலுவடையும் வரையில் அப்பூக்களை உதிர்த்துக்கொண்டே வரவேண்டும். வியாபாரமெனும் செடி மரமாகி வலுவடைந்த பிறகு அப்பூக்களைப் பூக்கவிடலாம்.

மேற்கூறிய விஷயங்களை ஆற அமர ஆலோசனை செய்து அதுபோல் அநுஷ்டித்துவந்தால் தனவந்தராவார்களென்பதில் சந்தேகமில்லை. விதியோ, தக்திரோ, நஸீபோ, கிரஹச்சாரமோ நம்மை ஆட்டிப்படைக்கவில்லை. விதிப்போல் நடக்காதவர்களே வறுமை, எளிமை முதலிய கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். விதியென்றால் என்னவென்று கவனிப்போம்.

விதி என்றால் என்ன?

விதியென்றால் ஆண்டவனால் விதிக்கப்பட்ட கட்டளை. அக்கட்டளைக்கிணங்க நடக்கவேண்டியது நம் கடமை. அக் கட்டளையைப் புறக்கணித்து அதற்கு நேர்மாறாக நடப்பதனாலேயே, வறுமை, எளிமை, துன்பம் முதலிய கஷ்டங்களை யனுபவிக்க நேரிடுகிறது. ஆண்டவனால் விதிக்கப்பட்ட கட்டளை அத்தனையும், நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் குர் ஆன் ஷரீபெனும் புருகான் வேதமாக நமக்கருளியிருக்கிறார்கள். அவ்விதி விலக்குகளைக் கடைப்பிடித்தொழுகினால் நமக்கு யாதொரு கஷ்டமும், நஷ்டமும் நேரிடா தென்பது திண்ணம். அத்துடன் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பொன்மொழிகளாகிய (ஹதீஸ்) உபதேசங்களையும் அனுசரித்து நடந்துவந்தால் வறுமை, எளிமை, மிடிமை, சண்டை, சச்சரவு, வம்பு, வழக்கு முதலிய எத்தகைய கஷ்டங்களும் நம்மை அணுகாவென்பது உண்மையிலும் உண்மை.

தற்காலை நம் சமூகத்தை நோக்கும்போது முற்றும் விதிக்கு முரணாக நடக்கிறது. ஆதலினாலேயே நம் சமூகம் க்ஷீணதசை யடைந்திருக்கிறது. வறுமை தாண்டவமாடுகிறது. செல்வ நிலை படுமோசமாகவிருக்கிறது. சொல்வாக்கிற்குச் செல்வாக்குக் கிடையாது. ஒரு சிலர் தனவந்தராயிருக்கலாம். அதனாலேயே நம் சமூகம் பொருளாதாரத் துறையில் முன்னணியிலிருக்கிறதென்று சொல்லமுடியாது.

நம் சமூகம் பொருளாதாரத்துறையில் முன்னேற வேண்டுமானால் அனாசாரச் சடங்குகளை நீக்க வழிதேட வேண்டும். நம் சாமானிய இச்சைகளை இஸ்லாத்தின்

சட்டதிட்டங்களுக்குக் கட்டுபட்டு நடக்கும்படி அடக்கி வைக்கவேண்டும். செலவு செய்யும்போது அனுவசியமான ஊதாரித்தனம் கூடாதென்று நம் திருமறை வற்புறுத்துகிறது.

> "மேலும் உங்களுடைய சுற்றத்தாருக்கு அவசியமான காலத்தில் அவர்களுக்கு வேண்டுவதையும், ஏழைகளுக்கும் வழிபோக்கருக்கும் கொடுத்துதவுங்கள். உங்களுடைய பொருளை வீணவழியில் விருதாவாகச் செய்யாதீர்கள்."
> (17 : 26)

பெருமைக்காகவும், கௌரவத்திற்காகவும் தனத்தை அகாரணமாய்ச் செலவு செய்யக்கூடாதென்பதை இவ்வாக்கியத்தால் தெரிந்துகொள்கிறோம்.

குழந்தையின் பிறவிச் சடங்கு, நாமகரணம் சூட்டுஞ் சடங்கு, அக்ஷராப்பியாசச் சடங்கு, கத்னாச்சடங்கு, காது குத்தும் சடங்கு, ருதுசாந்திச் சடங்கு, கல்யாணச்சடங்கு, சீமந்தச்சடங்கு முதலிய பல சடங்குகளிலும் அனுவசியமாக வீண்செலவு செய்யாதீர்களென்றே அவ்வாக்கியத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

குழந்தை பிறந்தால் பெண்வீட்டார் இம்மாதிரியான சடங்குகளைச் செய்யவேண்டும். அதற்குப் பதில் பிள்ளை வீட்டார் இத்தகைய செலவுகளைச் செய்யவேண்டுமென்று இருபுறத்திலும் அனுவசியமாகப் பணத்தைச் செலவு செய்கின்றனர். அதுமாத்திரமா ! குழந்தைகளின் காந்தளம்பூ போன்ற கரங்களிலும், தாமரைப்பூபோன்ற பாதங்களிலும் காப்பு, தண்டை, கொலுசு முதலிய நகைகளையும், இடுப்பில்

அரைஞாண், சதங்கை முதலிய நகைகளையும் பூட்டுகின்றனர். பெருமைக்காகவும், பெற்றவர்கள் கண்ணுறப் பார்ப்பதற்காகவும் குழந்தைகளுக்கு நகைகளைப் பூட்டுகிறார்களேயன்றி அக்குழந்தைகள் அனுபவிக்கும் கஷ்டத்தைக் கவனிக்கிறார்களில்லை. நம் படுக்கையின்கீழ் ஒரு சிறு கல்லோ, ஒரு புளியங்கொட்டையோ கிடந்தால் அது நம் உடம்பில் தாக்குகிறது. அதைச் சகிக்க முடியாமல் படுக்கையை எடுத்து அடியில் கிடக்கும் கல்லையோ, புளியங்கொட்டையையோ எடுத்தெறிந்துவிட்டுப் படுக்கையைப் போடுகிறோம். முன்னொருகாலத்தில் ஓர் அரசன் சயனிக்கும் இலவம்பஞ்சு மெத்தையில் ஓர் உரோமம் இருந்ததால் அவனுக்கு நித்திரை வரவில்லை என வாசித்திருக்கிறோம். அப்படியிருக்க, எப்பொழுதும் விரிப்பில் கிடந்து புரளும் குழந்தைகளின் இடுப்பில் போடப்பட்டிருக்கும் அரைஞாண், சதங்கை முதலியவைகள் தாக்கினால் குழந்தை சகித்துக்கொண்டிருக்க முடியுமா ? பேசத்தெரியாத குழந்தைகளால் அதை வெளியிடத்தான் முடியுமா ?

காலில் விலங்கு மாட்டினமாதிரி தண்டை, கையில் பூண்போலொத்த காப்பு, கழுத்தில் சுருக்குக்கயிறுபோன்ற சங்கிலி, இடுப்பில் இரும்புத்தளைபோன்ற அரைஞாண் ஆகியவைகளால் நம்மையறியாது நம் குழந்தைகளைச் சித்ரவதை செய்கிறோம். அம்மட்டோ ! திருடர்கள் தொல்லை வேறு. நகைகளைத் திருடிக்கொண்டு கொன்றுவிடப்பட்ட குழந்தைகள்தான் எத்தனை ! கால்வாய்களிலும், பிளாட்பாரங்களிலும் போடப்பட்ட குழந்தைகள்தான் எத்தனை ! தொலைதூரத்தில் விடப்பட்டு வழிதெரியாது கதறித்திரிந்த குழந்தைகள்தானெத்தனை ! நம் தனத்தைக்கொண்டு நம் குழந்தைகளுக்குத் தீங்கிழைப்பதைப்போன்ற துர்பாக்கியம் வேறென்ன விருக்கமுடியும் !

இன்னும் பிள்ளை தவழ்த்தல், நடத்தல், பல்முளைத்தல், மொட்டை யடித்தல், காது குத்தல் முதலியவைகளை முன்னிட்டு, பெருமைக்காகவும் கௌரவத்திற்காகவும் ஏராளமான பணத்தைச் செலவுசெய்கின்றனர். அம்மட்டோ! கல்யாணக் காலங்களில் ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொருவிதமான சடங்குகள் நடைப்பெறுகின்றன. கல்யாணத்திற்கும் அந்தச் சடங்குகளுக்கும் யாதொரு சம்மந்தமு மிராது. அந்தச் சடங்குகளைச் செய்வதற்குச் செலவுசெய்யும் ரூபாய்கள் தான் எத்தனை! அதனால் சம்பந்திகளுக்குள் ஏற்படும் வம்பு வழக்குகள் எத்தனை! சண்டை சச்சரவுகள் தான் எத்தனை! இங்ஙனம் நம் சமூகத்தார் பல வகையிலும் பணத்தை வீண் விரயஞ்செய்து எளியவர்களாகிவிட்டனர். ஆகவே நம் சமுதாயம் பொருளாதாரத் துறையில் பிற்போக்கடைந்திருக்கிறது.

தனவந்தர்களின் போக்கு.

நம் சமூகத்திலுள்ள தனவந்தர்கள் ஏராளமான பணத்தை, நகைகளிலும், சரிகை பட்டாடைகளிலும், அவ்வப்போது புதிது புதிதாக வந்துகொண்டிருக்கும் மோட்டார்களை வாங்குவதிலும், மற்றும் ஆடம்பரக் களியாட்டங்களிலும் செலவு செய்கின்றனர். சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்குரிய காரியங்களில் கவனம் செலுத்துகிறார்களில்லை. அவர்களுக்குள் ஒற்றுமையுமில்லை. பொறாமையால் ஒருவரைக்கெடுக்க ஒருவர் முனைந்து நிற்கின்றனர். கூட்டுறவு சங்கங்களை நிறுவி மில், ஆலை முதலியவைகளைத் திறந்து அவைகளின் மூலம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலுகிறார்களில்லை.

முன்பு நகையைப்பற்றிக் கவனிப்போம். பெண்கள் எதற்காக நகை யணிந்துகொள்வது என்பதுபற்றிப் பலர் பலவிதமாகச் சொல்கின்றனர். அழகுக்காகப் பெண்கள் நகை யணிந்துகொள்வதாகச் சிலர் சொல்கின்றனர். தற்காலே அவ்வாறே கருதப்படுகிறது. உலோகங்களை யணிந்து கொள்வதால் பேய், பிசாசுகள் அணுகா; வசிய சக்தியு முண்டு என்கின்றனர் சிலர். இன்னும் சிலரோ வேடிக்கை யார்த்தமான வியாக்கியானம் செய்கின்றனர்.

“ அக்காலத்தில் சீனதேசத்தில் பெண்கள் பிறந்தால் பாதங்கள் பெரிதாகாமல் குறுகுதலாயிருப்பதற்காகப் பாதங் களில் ஒருவித பாதரக்ஷையை மாட்டி நன்றாகக் கட்டிவிடுவது வழக்கம். ஏனென்றால் பெண்கள் ஓடிவிடுவார்களாம். பாதம் குறுகுதலாயிருந்தால் ஓடமுடியாதாம். அதுபோலவே இந் தியாவிலேயும் பெண்கள் ஓடிவிடாமலிருப்பதற்காக அக்கா லத்தில் கால்களில் கனத்த சங்கிலிகளைப் போடுவது வழக் கம். அச்சங்கிலிகளைப் போட்டுக்கொண்டு அதிகதூரம் நடக்க முடியாது. அதோடு சந்தடிசெய்யாமல் வெளியேறு வதைத் தடுப்பதற்காகவேண்டிச் சிலம்புகள் போடுவது. காலெடுத்து வைத்த மாத்திரத்தில் ‘ஜாக்கிரதை’ என்று கலீரென ஒலிக்கும் அச்சிலம்புகள். இக்காரணத்தை முன் னிட்டே கால்களில் நகைபோடுவது.

கைகளில் ஏதற்காக நகை போடுவது? துஷ்டர்கள் பலவந்த புணர்ச்சிக்கு எத்தனித்தால் தங்களையும், தங்கள் கற்பையும் காப்பதற்காகவே கரங்களில் நகைபோடுவது. அத னால்தான் அதற்குக் “ காப்பு ” என்று பெயர் வழங்கி வரு கிறது. அந்தக் காப்பு சுமார் இரண்டு அங்குல அகலமுள் ளது. அதில் நிறைய முட்கள் அமைக்கப்பட்டிருக்கும்

தற்காப்புக்காகப் பெண்களின் கரங்களில் முட்காப்புகள் போடுவது வழக்கம். பெண்களுக்கு இது ஒரு கையாயுதம் போன்றது.

இன்னும் கழுத்தில் நெல்லிக்காய் பருமனுள்ள பல வர்ணப் பளிங்குக் கற்களில் செய்யப்பட்ட மணிக்கோவைக ளும், அரைஞாண் அரைமூடி முதலியவைகளும் பலவந்த ஆலிங்கனத்திற்கு இடையூறாயிருப்பதற்காகவே போடப் படுகின்றன.

மாமி பேசும் இரகசியங்கள் மருமகள் காதில் விழாம லிருப்பதற்காகவே காதின் துவாரத்தை மறைக்கும்படியான கொப்புமாட்டி, மயிர்மாட்டி முதலிய நகைகளைப் போடுவது.

மாமியிடம் தர்க்கவாதம் செய்யாமலிருப்பதற்காக வேண்டி மூக்கில் புல்லாக்குப் போடப்படுகிறது. உதடு அசையும்போது புல்லாக்கும் அசையும். அச்சமயம் மூக்குத் தண்டு வலிக்கும். ஆகவே மருமகள் அதிகமாகப் பேசமாட் டாள். இதற்காகவே மூக்கில் நகை போடுவது.

ஒரு கிளியை இரும்பு அல்லது பித்தளைக் கம்பியால் செய்த கூண்டில் அடைத்துவைப்பதும், தங்கக்கம்பியால் நாகரீகமாகச் செய்த கூண்டில் அடைத்துவைப்பதும் ஒன்றே. எவ்வகையிலேனும் கிளி பறந்துவிடாமலிருக்க வேண்டும். அதுபோலவே அக்காலத்தில் செம்பினாலும், பித்தளையினாலும், இரும்பினாலும், போடப்பட்ட நகைகள் தற்காலே தங்கத்தாலும் வெள்ளியினாலும் காலத்திற்குத் தக்கவாறு நாகரீகமாகச் செய்து போடப்படுகின்றன." என்று வியாக்கியானம் செய்கின்றனர் சிலர்.

படித்த வித்வான்களும் எல்லாமறிந்த மஹான்களும் "பெண்கள் கொடியவர்கள். அவர்களை, நம்பக்கூடாது. அவர்கள் வார்த்தைகளைக் கேட்கக்கூடாது" யென்று சொல்லியிருக்கின்றனர். ஔவை ஒரு பெண்பாலாயிருந்தும் அவள்தானும் 'தையற்சொற்கேளேல்' என்று சொல்லியிருக்கிறாள். அவர்கள் சொல்வதையும், நகை போடுவதைப் பற்றிய வியாக்கியானத்தையும் பொருத்தி ஆலோசிக்கும்போது அந்த வியாக்கியானத்தை நம்ப இடந்தருகிறது. அது வேடிக்கையாகத் தோன்றவில்லை. உண்மையென்றே தெரிகிறது.

நகை அழகுக்காகப் போடப்படுகிறதென்று சொல்லுகின்றனர் சிலர். ஒருவர் தன் மனைவியை எக்காரியத்தை முன்னிட்டு நகைகளால் அலங்காரஞ் செய்கின்றனரோ, அக்காரியத்தி லீடுபடும்போது அதையனுபவிக்க முடியாமல் அந்த நகைகள் இடையூறாயிருக்கின்றன. ஆகவே மேல் நாட்டார் அனேகமாய் நகையணிவது கிடையாது.

நம் சமூகத்திலுள்ள தனவந்தர்கள் ஒரு நகை யணியுமிடத்தில் ஒன்பது நகைகளை மாட்டுகின்றனர். பார்ப்பதற்கு விகாரமாயிருக்கிறது. அடிக்கடி நகைகளை அழித்துப் புது மாதிரியான நகைகள் சமைக்கின்றனர். அதனால் விரயமாகும் பணம்தான் எத்தனை! அனேகமாய் அவைகளை யணிந்துகொள்வதுங் கிடையாது. பெட்டியில் தூங்கிக் கொண்டிருக்கும். பத்து சவரனில் சமைத்த நகையை அழித்தால் எட்டு சவரனே தேரும். இரண்டு சவரன் வீண்விரயம். மீண்டும் புது நகை சமைப்பதற்குத் தட்டானுக்குக் கூலி வேறு. இரண்டு சவரனில் சமைக்கக்கூடிய நகையைப் பத்துப் பதினைந்து சவரனில் செய்கின்றனர்.

ஒரு சமயம் ஒருவர் புதுமாதிரியான நகை சமைக்கக் கருதி, பன்னிரண்டு சவரனில் சமைத்த நகையொன்றை அழித்தார். அதில் இரண்டு சவரனிடைதா னிருந்தது. அச்சமயம் அவரடைந்த ஏமாற்றத்திற்கு அளவே கிடையாது. அந்த நகையைச் சமைத்த தட்டான் அவருக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்பித்துக்கொடுத்தான். அதாவது அந்த நகையை இரண்டு அல்லது இடண்டரை சவரனில் தாராளமாகச் சமைக்கலாமென்ற பாடத்தைக் கற்பித்துக் கொடுத்தானென்றுதான் சொல்லவேண்டும். இங்ஙனம் அளவுகடந்த பணத்தை வீண்செலவு செய்கின்றனர்.

விலையுயர்ந்த சரிகை பட்டாடைகளை வாங்கி விசேஷமான நாட்களில் சற்று நேரம் உடுத்திக்கொள்கின்றனர். மற்றக் காலங்களில் அநேகமாக மடித்துப் பெட்டியில் வைக்கப்படுகின்றன. சாதாரணமாக உடுத்திக்கொள்வது கிடையாது. கடைசியாக அந்த சரிகை பட்டாடைகள் மடிப்புகளிலெல்லாம் கத்தரித்தமாதிரி கிழிந்துவிடுகின்றன. ஆடைகள் முழுதும் சல்லடைபோல் ஓட்டையாகி விடுகின்றன.

தனவந்தர்களுக்கு வியாபார நிமித்தம் போகவர மோட்டார் ரதம் தேவையே. ஆனால் அடிக்கடி வந்துகொண்டிருக்கும் புதியமாடல் மோட்டார் ரதங்களை வாங்குவதற்காகத் தங்களிடமுள்ள மோட்டார் ரதத்தையும் சில ஆயிர ரூபாய்களையும் கொடுத்து மாற்றிக்கொண்டே யிருக்கின்றனர். இதனால் விரயமாகும் பணத்தின் அளவு! அதுமாத்திரமா! இன்னும் சில தனவான்கள் கிளப்புகளிற் சேர்ந்து அங்கு நடைபெறும் நவநாகரீகச் சூதாட்டங்களில் பணத்தை விரயஞ் செய்கின்றனர். இங்ஙனம் பணத்தை நகைகளிலும், மோட்டார் ரதங்களிலும், சரிகை பட்டாடை

களிலும், சூதாட்டங்களிலும், மற்றும் பல ஆடம்பரங்களிலும் பெருமைக்காகவும், கௌரவத்திற்காகவும் செலவு செய்கின்றனர்.

நம் சமூகத்திலுள்ள தனவந்தர்கள் பொறாமைக் குணத்தைவிட்டுத் தங்களுக் கிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து, கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி, நம் சமூகத்திலுள்ள எளியவர்களையும் அதில் ஷேர் ஹோல்டராகச் (பங்குதாரர்களாகச்) சேர்த்து மில்களையும், ஆலைகளையும் திறந்து, நம் சமுதாயம் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைவதற்கு வழிகோலவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். இதனால் நம் தேசத்தில் தற்கால தலைவிரித்தாடும் பஞ்சமும் தொலையுமென்பதில் ஐயமில்லை.

எளியவர்களின் போக்கு.

"என்ன செல்வம்! நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். பணக்காரர்கள் எப்போதும் வியாதியஸ்தராகவேயிருக்கின்றனர். டாக்டர்களுக்கும், ஹகீம்களுக்கும், வைத்தியர்களுக்கும் கஷாய மருந்துகளுக்குமே அப்பணம் போய் சேருகிறது."

"அவனுக்கு லக்ஷக்கணக்கில் பணமிருக்கிறது. பிள்ளையே கிடையாது. பிள்ளைச்செல்வந்தான் பெரும்செல்வம்."

"அவ்வளவு பணமிருந்தும் யென்னபிரயோஜனம்? எல்லாம் பெட்டைக்குட்டிகளா யிருக்கின்றன. எவனெவனோ அனுபவிக்கப்போகிறான்."

"இவ்வுலகைவிட்டுப் போகும்போது தேடியபொருள் கூடவராது."

மேற்கண்ட வாக்கியங்க ளெல்லாம் எளியவர்களால் சொல்லப்படுவது.'

நோய், தனவந்தர்களுக்கும் வருகிறது; எளியவர் களுக்கும் வருகிறது. தனவந்தர்களும் சுகஜீவியா யிருக் கின்றனர்; ஏழைகளும் சுகஜீவியாயிருக்கின்றனர். இது அவரவர்கள் தேகவாட்டத்தைப் பொருத்தது. பணத் திற்கும் நோய்க்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாது.

தனவந்தர்களில் சந்ததியே யில்லாதவர்களு மிருக்கின் றனர். சந்ததியுள்ளவர்களுமிருக்கின்றனர். ஆண் சந்ததி யுள்ளவர்களுமிருக்கின்றனர். பெண் சந்ததியுள்ளவர்களு மிருக்கின்றனர். ஆண், பெண் சந்ததியுள்ளவர்களுமிருக் கின்றனர்.

எளியவர்களில் குழந்தையே யில்லாதவர்கள் நிம்மதி யாக வாழ்கின்றனர். குழந்தைகளையுடையவர்கள் அவை களைப் பரிபாலிக்கப்படும் கஷ்டம் சொல்லத்தரமன்று. அதிலும் பெண்களைப் பெற்றோர், பணம் பறிக்கும் கழுகு களாகிய பிள்ளைவீட்டாரின் மனோரதத்தைப் பூர்த்தி செய்ய, கால்வயிற்றுக்கஞ்சிக் குடித்து பசியும் பட்டினியுமா யிருந்து பணத்தைச் சேகரித்து அனாசாரச் செலவு செய்கின் றனர். ஆகவே பணத்திற்கும், பிள்ளையில்லாமலிருப்ப தற்கும் யாதொரு சம்மந்தமுங் கிடையாது.

இவ்வுலகில் பிறப்போரனைவரும் இறப்பது நிச்சயம். இறக்கும்போது பணம் கூடவாராதென்று பணம் சம்பாதிக் காம லிருக்கிறார்களா என்ன?

பணத்தைச் சம்பாதிக்க முடியாதவர்கள் தத்தம் மன ஆறுதலுக்காக மேற்கண்டபடி சொல்லுகின்றனரேயன்றி,

அவர்கள் மனப்பூர்வமாகச் சொல்லவில்லை. மேற்கண்டபடி சொல்லும் எளியவர்களுக்குப் பணம் கிடைத்தால் (அதனால் நோய்வரும். பிள்ளையே பிறக்காது. அல்லது பெண் குழந்தையே பிறக்கும். சாகும்போது கூடவாராது. ஆகவே) அதை வேண்டாமென்று சொல்வார்களா? ஒருக்காலும் சொல்லமாட்டார்கள்.

இல்லாதவனைப் பொல்லாதவ னென்பர்—இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள் செல்லா தனவன்வாயிற் சொல்.''

பணமில்லாதவனை மனையாட்டியும் விரும்பமாட்டாள். பெற்றெடுத்த தாயும் விரும்பமாட்டாள். அவன் சொல்லுக்கும் மதிப்புக்கிடையாது. பணமில்லாதவர்கள் உயிருள்ள பிணமாகவே கருதப்படுகின்றனர்.

தற்காலை கற்றோர், வித்வான், பண்டிதர், பாவலர், நாவலர், பீர், ஷெய்கு, மவ்லானா, பெரியாத்துமா முதலிய எல்லா ஆத்மாக்களும் தனவந்தர்களிடம் தாயம் வாங்குகிறவர்களாகவே திகழ்கின்றனர். தனவந்தர்கள் விரும்பும் காரியங்கள் எதுவாயினும் பூர்த்திசெய்து கொடுக்கவும் தயாராயிருக்கின்றனர். என்னே! பணத்தின் திருவிளையாடல்!

ஆகவே, எளியவர்கள் வாய் வேதாந்தம் பேசுவதை விட்டு தனவந்தராக முயலவேண்டும். தனவந்தராவதற்கு விதி தடையாயிருக்கவில்லை யென்பதை உறுதியாக மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். முயற்சித்தால் தனவந்தராகலாமென்கிற நம்பிக்கையை மனதில் பூட்ட வேண்டும்.

வீண்செலவு செய்யக்கூடாது. வீண்செலவு செய்பவர்களைப் பார்த்து "அவர்களைவிட நாமென்ன குறைந்தவர்கள்?" எனக் கருதி, பெருமைக்காகவும் வீம்புக்காகவும் செலவு செய்யக்கூடாது. தனவந்தர்களைப்போல் செலவு செய்யவேண்டுமென்கிற மனப்பான்மை கூடாது. சுருக்க வேண்டிய செலவுகளைச் சுருக்கவேண்டும். ஒரு செலவை செய்யப் புகுமுன் "அது அவசியந்தானா?" வென்று ஆலோசித்துச் செய்யவேண்டும். அது அவசியமில்லையென்று தோன்றினால் செலவு செய்யக்கூடாது. ஓரணா இரண்டணாவால் என்ன முழுகிவிடப்போகிறதென்று கருதக்கூடாது. ஒரு ரூபாயில் ஓரணா குறைந்தாலும் அதற்கு ரூபாயிக்குள்ள மதிப்புக்கிடையாது. பதினைந்தணா வென்று தான் சொல்லப்படும். ஆகவே ஓரணா இரண்டணா வென்று அலக்ஷியமாய்க் கருதக்கூடாது. ஆறுகளில் மழை துளிதுளியாகத்தான் பெய்கிறது. குடம்குடமாகக் கொட்டவில்லை. பல துளிகள் சேர்ந்து ஓர் ஆறு நிறைகிறது. அதேபோல் பல அணாக்கள் சேர்ந்து ரூபாயாகிறது. பல ரூபாய்கள் சேர்ந்து நூறு ரூபாய்களாகின்றன. பல நூறு சேர்ந்து லக்ஷமாகின்றன. பல லக்ஷஞ் சேர்ந்து கோடி ரூபாய்களாகின்றன. ஆகவே சம்பாதிக்கும் ஒவ்வொரு பைசாவையும் அனாவசியமாகச் செலவு செய்யக்கூடாது.

காலம் மிக்க மதிப்பு வாய்ந்தது. காலத்தை வீண் விரயஞ் செய்யக்கூடாது. கும்புகூடி வம்பளப்பவர்களுடன் கூடிக்கொண்டு காலத்தைப் போக்கக்கூடாது. காலத்தைக் காரியம் செய்வதிலேயே செலவிடவேண்டும். இதனாலே ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடாதென்பதல்ல. தொழில் செய்யும்படியான காலத்தை வீணாகப் போக்கக்கூடாது.

தனவந்தர்களின் கடமை.

தனவந்தர்கள் பழைய சக்கிரத்தைத் திருப்பிக்கொண்டிருப்பதால் பிரயோஜனமில்லை. வருங்காலத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். இதர சமூகங்கள் பொருளாதாரத் துறையில் எப்படி முன்னேறிக்கொண்டிருக்கின்றன வென்பதைக் கவனிக்கவேண்டும். எட்டுக்குக்கொண்டு பத்துக்கு விற்பதையே பெரிதாக எண்ணிக்கொண்டிருக்கக் கூடாது. அதிலும் இந்த யுத்த காலத்தில் பலவகையிலும் கிடைத்த பணத்தைக்கொண்டு மகிழ்ச்சி யடைவதால் பிரயோஜனமில்லை. எப்பொழுதும் யுத்தகாலத்தைப்போல் வருவாய் வந்துகொண்டிருக்குமா வென்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தற்காலை உலகம் விஞ்ஞான மயமாய் விளங்குகிறது. பலபேர்கூடி பலமாதங்கள் செய்யக்கூடிய வேலையை சில மணி நேரத்தில் செய்யக்கூடிய பல நூதன இயந்திரங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

வட நாட்டைச் சற்று ஏறிட்டுப்பாருங்கள். அங்குச் செல்வ நிலை எங்ஙனம் அபரிமிதமாகச் செழித்திருக்கிறது! அதற்குக் காரணம் யாதென்று ஆராய்ந்து பாருங்கள். அங்கு பாங்கிகளும், இன்ஷியூரன்ஸ் கம்பனிகளும் ஏராளமாயிருக்கின்றன. யுத்தத்திற்கு முன்னிருந்த பாங்கிகளை விடத் தற்காலை இரண்டத்தனை பாங்கிகளும், அனேக இன்ஷியூரன்ஸ் கம்பனிகளும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக இன்ஷியூரன்ஸ் கம்பனிகளில் மாதாமாதம் கோடிக்கணக்கான ரூபாய்கள் குவிகின்றன. அந்த ரூபாய்கள் அங்குள்ள சகல தொழிற்சாலைகளிலும் உபயோகிக்கப்படுகின்றன.

பலபேர் கூடிப் பல மாதங்கள் செய்யக்கூடிய வேலையில் கிடைக்கும் ஆதாயம், நூதன இயந்திரங்களுள்ள தொழிற் சாலைகளின் மூலம் சிலமணி நேரத்தில் கிடைத்துவிடுகிறது. ஆகவே அங்குச் செல்வ நிலை நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டு வருகிறது.

நம் சமூகத் தனவந்தர்கள் எட்டுக்குக் கொண்டு பத்துக்கு விற்கும்படியான வர்த்தகத்தின் முதல் வகுப்பிலேயே இருக்கின்றனர். அதற்குமேல் வகுப்பிற்குப் போகும்படியான எண்ணமே அவர்களுக்கு உதிக்கவில்லை. தனவந்தர்களுக்கு பாங்கிகளைப்பற்றியும், இன்ஷியூரன்ஸ் கம்பனிகளைப் பற்றியும் அநேகமாகத் தெரியும். அதைப்பற்றி இங்கு விபரித்துக்கூற தேவையில்லை.

தனவந்தர்கள் கூடி மேற்கண்ட விஷயங்களைப்பற்றி நன்கு ஆலோசனைசெய்து, கூட்டுறவு சங்கங்களை நிறுவி, பாங்கிகளையும், இன்ஷியூரன்ஸ் கம்பனிகளையும் ஸ்தாபிக்க முயலவேண்டும். நவீன இயந்திரங்களின் மூலம் தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும். தொழில்களை அபிவிருத்திசெய்ய இந்தப் பணப்பெருக்கமான காலமே அநுகூலமானது. அங்ஙனம் செய்தால்தான் நம் சமூகம் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைய முடியும்.

பொருட்செல்வத்தை நூதன முறையில் தேடக் கல்விச் செல்வம் முக்கியமாகத் தேவை. நம் சமூகத்தில் படித்தவர்கள் நூற்றுக்கு எத்தனைபேர் இருப்பார்களென்று கவனித்துப்பாருங்கள். படிக்க ஆர்வமுள்ள எளியவர்கள், புத்தகத்திற்கும் சம்பளத்திற்கும் வகையில்லாமல் திண்டாடுகின்றனர். தனவந்தர்களின் பிள்ளைகளோ, கொஞ்சம் எழுதப்படிக்கத் தெரிந்ததே மேற்கொண்டு படிக்க மனமில்லாத

வர்களாய் ஆடம்பரப் பிரியர்களாகத் திரிகின்றனர். படிக்க ஆர்வமுள்ள எளியவர்களுக்குப் பணமில்லை. பணமுள்ளவர்களின் பிள்ளைகள் படிப்பதில்லை. இங்ஙனம் நம் சமூகத்தில் பாமர மக்களே அதிகமா யிருக்கின்றனர்.

தனவந்தர்கள் இவ்விஷயங்களைக் கவனித்து நம் சமூக மக்களைக் கல்வியறிவுள்ளவர்களாகச் செய்யவேண்டியது அவசியமாகும். வருங்காலத்தில் கல்வியறிவில்லாதவர்களும், செல்வமில்லாதவர்களும் மனிதவர்க்கமாக வாழவே முடியாது. ஆகவே வருங்காலத்தை யுத்தேசித்து நம் சமூகத்திலுள்ள அனுசாரங்களையும், ஊழல்களையும் களைந்து, நம் சமூகம் கல்வி யறிவிலும், செல்வத்திலும் திகழும்படி செய்யவேண்டியது தனவந்தர்களின் கடமையாகும்.

பணத்தைத் தேடவேண்டிய முறை.

பணத்தைச் சம்பாதிக்கவேண்டு மென்றால் பிறரை ஏமாற்றியோ, நம்பிக்கை துரோகம் செய்தோ, பிறர் பொருளை சட்ட விரோதமாக அபகரித்தோ, அளவு—நிறை முதலியவைகளில் திருட்டுத்தனம் செய்தோ சம்பாதிக்க வேண்டுமென்பதல்ல. நியாயமான முறையிலேயே பணத்தைச் சம்பாதிக்கவேண்டும்.

> "நீங்கள் ஒருவர் மற்றொருவருடைய ஆஸ்தியை அநியாயமாய் அபகரித்துத் தின்னாதீர்கள். மேலும் பிறருடைய பொருளை நியாய விரோதமான முறையிலே நீங்கள் அபகரித்துக்கொள்ளும் பொருட்டு நியாயாதிபதிகளுக்கு நீங்கள் லஞ்சம் கொடுக்காதிருப்பீர்களாக." (2 : 188)

" சரியான அளவின்பிரகாரம் அளந்து கொடுங்கள். மேலும் குறைத்துக் கொடுக்கக்கூடிய நஷ்டவாளிகளுள் நீங்கள் சேராதீர்கள். மேலும் சரியாகவும், உண்மையாகவும் இருக்கக்கூடிய நிறை கோலினுல் நிறுத்துக் கொடுங்கள். இன்னம் மனிதர்களை அவர்களுடைய பொருள் விஷயத்தில் ஏமாற்ருதீர்கள்." (26 : 181-182)

பணம் சம்பாதிக்க முயல்வோர்கள், மேற்கண்ட குர்ஆன் ஷரீபின் வாக்கியங்களை யநுசரித்து நேரான வழியில் சீராக நடந்துகொள்ளவேண்டும். மோசத்தனத்தாலன்றி நியாயமான முறையில் பணத்தைத் திரட்டமுடியாதென்று கருதுகின்றனர் சிலர். அது சுத்தத் தவறு. ஒரு சிலர் தகாத முறையில் பணத்தைச் சம்பாதித்திருக்கலாம். அதையே ஆதாரமாக எடுத்துக்கொண்டு நேரானவழியில் பணத்தைச் சம்பாதிக்க முடியாதென்று கருதுவது தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வதாகும். நியாயமான முறையில் பணத்தைச் சம்பாதிக்கவே முடியாதென்ருல், தனவந்தர்களாயிருப்பவர்களனைவரும் மோசக்காரர்களென்றுதான் தீர்மானிக்கவேண்டும். அப்படித் தீர்மானிப்பது சாத்தியமா? அது முடியாத காரியம். ஆகவே பணத்தை நேரானவழியில் சீராகச் சம்பாதிக்க முடியும். அதற்குரிய முறைகளையும் நாம் இந்நூலில் விளக்கிக் காட்டியிருக்கிறோம். மோசத்தனத்தாலன்றி, நேரான வழில் பணத்தைச் சம்பாதிக்க முடியாதெனக்கருதி ஏமாற்ற மடையாதீர்கள். இந்நூலிற் சொல்லியபடி பணத்தை நேரான முறையில் சம்பாதித்து உங்கள் வாழ்க்கைத்தோணியை வகையுடன் செலுத்துங்கள்.

சடங்குகள்.

நம் சமூகத்தில் நடைபெறும் சகல சடங்குகளும் பொருளாதாரத்தின் வேரை அரிக்கும் புழுக்களாகவே யிருக்கின்றன. படித்தோர், பாமரர், தனவந்தர், எளியவர் யாவரும் அனுசாரச் சடங்குகளே செய்துவருகின்றனர். அவை மூதாதைகளின் பழக்க வழக்கங்களென்று சொல்கின்றனர். பல்லாண்டுகளாக நடக்கு சம்பிரதாயங்களென்கின்றனர். மூதாதைகள் அறியாமையால் ஏதேதோ சடங்குகளை செய்துவந்தனர். அதனால் நாமும் செய்யவேண்டுமென்பது அவசியமல்ல.

ஒரு காரியத்தை முன்னிட்டு ஒரு சடங்கை செய்யப் புகுமுன் "அச்சடங்கு எதற்காகச் செய்வது? அதனால் என்ன அநுகூலம்? அதை செய்யாவிட்டால் என்ன நஷ்டம்? அச்சடங்கிற்கும் அக்காரியத்திற்கும் என்ன சம்மந்தம்? அச்சடங்கை செய்யாவிடில் அக்காரியத்திற்கு குந்தகம் ஏற்படுமா? அச்சடங்கை செய்யாமலே அக்காரியத்தை நடத்த முடியாதா? அச்சடங்கு நம் மார்க்கச் சட்டதிட்டங்களுக்குட்பட்டதா?" என்று ஆலோசித்து செய்யவேண்டியது கிரமம். அதைவிட்டு மூதாதைகள் செய்தார்கள் நாங்களும் செய்கிறோமென்பது அறிவின் குணமுள்ளவர்களின் செய்கையல்ல; சுபாவக்குணமுடையவர்களின் செய்கையாகும்.

கஞ்சா, அபின், மதுபான முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிப்போர் அவைகளின்மீது கொண்டிருக்கும் மோகத்தைப்போல், சடங்கென்னும் லாகிரியில் நம் சமூகம் மோகமுற்றிருப்பது வருந்தத் தக்கது. கற்ற அறிவுடை

யோர்கள் லாகிரி வஸ்துக்களை உபயோகித்து அறிவிழந்து விடுவதேபோல், கற்ற அறிவுடையோர்களும் இச்சடங்கெனும் லாகிரியால் அறிவிழந்து விடுகின்றனர்.

முக்கியமாக சடங்கெனும் லாகிரியை யூட்டுவது பெண்களே. பெண்புத்தி பேதை என்பர். அவர்களுக்கு சடங்கினுல் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் என்னதெரியும்? அவர்கள் தங்கள் புத்திக்குத் தக்கவாறு எதேதையோ செய்யச் சொல்வார்கள். அவர்களைத் திருத்துவது புருஷர்களின் கடமையாகும். ஆனுல் புருஷர்களோ அவர்களின் கைப்பாவையாக ஆடுகின்றனர். தற்காலே சடங்கெனும் சட்ட திட்டங்களுக்கு அதிகாரியாயிருப்பவர்கள் பெண்மக்களே. நாளுக்கு நாள் அதற்கு மெருகிட்டுக்கொண்டும், அபிவிருத்தி செய்துக் கொண்டும் வருகின்றனர்.

சடங்கிற்காக வீண் செலவு செய்ய குடியிருக்கும் வீட்டை அடமானம் வைத்தும், விற்றும் அதோகதியான குடும்பங்கள் எத்தனை! வியாபாரத்தில் புரண்டுகொண்டிருக்கும் பணத்தை சடங்கிற்காக செலவுசெய்துவிட்டு வியாபாரம் முறிந்து கடன்காரர்களாகி கஷ்டப்படும் குடும்பங்கள்தான் எத்தனை! இங்ஙனம் நம் சமூகம் சடங்கினுல் பீடிக்கப்பட்டு பொருளாதாரத் துறையில் பிற்போக்கடைந்திருக்கிறது. ஆகவே நம் சமுதாயத்தை ஆட்டிப்படைக்கும்படியான சடங்கெனும் விஷப்புழுவை அகற்றவேண்டியது அறிவுடையோர் கடமையாகும்.

பிரசாரம்

பொருளாதார முன்னேற்றத்திற்குப் பிரசாரம் அத்தியாவசியமானது. நம் சமூகத்தில் ஆலிம், மவ்லானா, மவ்லவி, புலவர், பாவலர், நாவலர் முதலிய பிரசாரகர்களிருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலரே நம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உழைக்கக் கூடியவர்களாயிருக்கின்றனர். அவர்களாலேயே நம் சமூகம் சற்றுக் கண் திறந்திருக்கிறதெனலாம். மேற்சொன்ன ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் செய்யும் பிரசாரம் நம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கக்கூடிய முறையிலிருக்கிறது.

சிலர் வைதீகத்தைப்பற்றியே பிரசாரம் செய்கின்றனர். லௌகீகத்தைப் பற்றி பிரசாரம் செய்வதே கிடையாது. இன்னும் சிலர் இவ்வுலகத்திற் குரிய பிரசாரத்தை விட்டுவிடுகின்றனர். மறு உலகப்பிரசாரத்தி லிறங்கிவிடுகின்றனர்.

"இவ்வுலகம் அநித்தியமானது. அழியக் கூடியது. இதில் தோன்றுபவை யெல்லாம் மாயை. முக்கியமாக, பணத்திலே ஷைத்தான் குடிகொண்டிருக்கிறான். பணம் ஆண்டவனை மறந்திடச் செய்யும். பணம் பாஷாணம். இவ்வுலகத்தின் அற்ப வாழ்வை நம்பி, அவ்வுலகத்தின் பெரிய வாழ்வை இழந்து விடக்கூடாது. ஆண்டவன் பணத்தைக் கொடுத்துச் சோதிக்கிறான். அவ்வுலகத்தில் பணம் நெருப்பாகவும், தேளாகவும், பாம்பாகவும் மாறித் துன்பப் படுத்தும்". என்று பிரசாரம் செய்கின்றனர். இத்தனையும் அந்தப் பணத்தை யடைவதற்காகவே சொல்கின்றனர் கடைசியாக அந்தப் பணத்தையே வசூல் செய்துகொண்டு போகின்றனர். எத்துணை விந்தையான பிரசாரமிது!

நம் சமூகத்திலோ யாதொரு தொழிலும் செய்யாமல் சோம்பேறிகளாகத் திண்ணை ஞானம் பேசுவோர்கள் மிகுதம். பெற்றோர் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதை, நோகாமல்

வேளை வேளைக்குத் தின்றுவிட்டு ஊரைச் சுற்றி வருவோர்கள் அநேகர். முன்னோர்கள் தேடிவைத்த வீடு மனைகளை அடமானம் வைத்தும் விற்றும் துர்விநியோகம் செய்வோர்கள் பலர். அவர்களுக்கு மேற்கண்ட பிரசாரம் மிக்க அநுகூலமா யிருக்கிறது.

"என்ன பணம்? இப்பொழுதாவது ஆண்டவனை மறக்காமலிருக்கிறோம். பணம் வந்தால் ஆண்டவனை மறந்திடச் செய்யும். இரவு பகலாய்க் கஷ்டப்பட்டுப் பணத்தைச் சேர்க்கவும் வேண்டாம். ஆண்டவனை மறந்து நரகத்திற்குப் போகவும் வேண்டாம். அங்குப் பாம்பும் தேளும் பிடுங்கவும் வேண்டாம்" என்று சோம்பேறிகளாகத் திரிகின்றனர். இத்தகைய பிரசாரத்தால் நம் சமூகம் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய முடியுமா?

நம் சமூகத்திலுள்ள பிரசாரகர்களில் ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் அநேகமாய்ச் சுயநலக்காரர்களாகவே யிருக்கின்றனர். அவர்கள் பணத்திற்கும் பதவிக்கும் ஆசைகொண்டு நம் சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகளாயிருக்கின்றனர். முக்கியமாக இவர்களே நம் சமூக க்ஷீணதசைக்குக் காரணகர்த்தர்களா யிருக்கின்றனர். நம் சமூக எதிரிகள் இத்தகைய பிரசாரகர்களாகிய மௌலானா, மௌலவிகளையுமே தங்கள் கையாயுதமாக வைத்துக்கொண் டிருக்கின்றனர்.

துருக்கி தேசத்திற்கு 'நோயாளி' என்ற பட்டத்தைச் சூட்டும்படி செய்தவர்களும் இத்தகைய மௌலானா மௌலவிகளே. ஆப்கானிஸ்தானத்தில் அமானுல்லாகான்மீது படுதூறு சொல்லிப் பிரஜைகளைக் கிளப்பிவிட்டவர்களும் இத்தகைய மௌலானாக்களே. தற்காலே இந்திய அரசியல் சதுரங்கத்தில் நம் சமூக எதிரிகளின் ஆட்டக் காய்களாயிருப்பவர்களும் இந்த மௌலானா மௌலவிகளே. இவர்களோ சமய சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு அர்த்தத்தை அனர்த்தம்

செய்வதில் வல்லவர்கள். "ஊக்கமது கைவிடேல்" என்றால் ஊக்கத்தைக் கொடுக்கக்கூடிய மதுபான வகையறுக்களைக் கைவிட்டு விடாதே என்பதற்கிணங்க, பேருள் பிரிக்கக் கூடிவர்கள். இத்தகைய முறைபீகின்களாகிய நயவஞ்சக உலமாக்களைப் பஹிஷ்கரிக்கும் காலம் அதிக தூரத்திலில்லை.

பத்திரிகைப் பிரசாரம்.

பொருளாதார முன்னேற்றத்திற்குப் பத்திரிகைப் பிரசாரமும் அவசியமாகும். தென்னாட்டைப் பொருத்தவரை நம் சமுதாயத்திற்கென ஒரு தினசரியேனுங் கிடையாது. ஒரு சில அறிஞர்கள் மாதாந்திர—வாராந்திரப் பத்திரிகைகளை மிக்க கஷ்ட நிலைமையில் நடத்திக்கொண்டு வருகின்றனர். நம் சமுதாயத்தின் பிற்போக்கையும், அதைச் சீர்திருத்த உழைக்கும் பத்திரிகைகளின் கஷ்டத்தையும் உணர்ந்த சிலரே அப்பத்திரிகைகளை ஆதரித்து வருகின்றனர். தாகத்தால் வருந்துவோனுடைய நாவில் ஒரு துளி இரு துளி ஜலத்தை விட்டமாதிரியாகத்தா னிருக்கிறது அப்பத்திரிகைகளுக்குள்ள ஆதரவு.

நம் சமூகத்தில் தனவந்தர்களில்லையா? பல தனவந்தர்கள் சேர்ந்து ஒரு தினசரியை நடத்தமுடியாதா? அவ்வப்போது வர்த்தகத்தில் நிகழக்கூடிய குறைப்பாடுகளை எடுத்துச் சொல்வதற்காகவாவது தனவந்தர்களுக்கு ஒரு தினசரி வேண்டாமா? இந்த இருபதாம் நூற்றாண்டில், அதிலும் வர்த்தகக் கட்டுப்பாடுகள் நிறைந்த இந்தச் சந்தர்ப்பத்தில், வர்த்தகத்துறையி லீடுபட்டிருக்கும் தனவந்தர்கள், தங்களுக்கும் தங்கள் சமூகத்திற்கும் ஒரு தினசரி வேண்டுமென்பதை உணராதிருப்பார்களாயின் அவர்களைப்போல் அறியாதவர்கள் இவ்வுலகத்தில் ஒருவரேனும் இருக்கமாட்டார்களென்றுதான் சொல்லவேண்டும். வருமுன் காப்பதுவே வகையான செயலாகும். வந்தபின் நொந்தழுவதில் பிரயோஜனமில்லை. இதுவோ நெருக்கடியான காலம். அடிக்கடி

புதியபுதிய சட்டங்கள் அவதார மெடுக்கின்றன. அதனால் வர்த்தகத்திற்கு ஏற்படும் சாதக பாதகங்களை எடுத்துச் சொல்ல முக்கியமாக ஒரு தினசரி தேவை. ஆகவே தனவந்தர்கள் இவ்விஷயத்தில் அஜாக்கிரதையா யிராமல் உடனே ஒரு தினசரியை ஆரம்பித்து நம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலவேண்டியது அவசியமாகும். தற்சமயம் நடந்துகொண்டிருக்கும் மாதாந்திர வாராந்திரப் பத்திரிகைகளையும் வாரம் இருமுறை—மும்முறை வெளிவரும் பத்திரிகைகளையும் சந்தா மூலமாகவும், நன்கொடை மூலமாகவும் ஆதரிக்கவேண்டியது நம் சமூகத்தாரின் கடமையாகும்.

உழைத்தால் ஊதியம் பெறலாம்.

உழைக்காமல் சோம்பேறித்தனமாகச் சும்மாவிருந்து கொண்டு "அதிருஷ்டமிருந்தால் ஆரைக்கேட்டுக்கொண்டு வரப்போகிறது. கொடுக்கிற நாயன் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பான்" என்று சொல்லிக்கொண்டி ருந்தால் பணம் வந்து குதித்துவிடாது. நாயன் கூரையைப் பிய்த்துக் கொண்டு அதன் வழியாக ரூபாய்களையும், சவரன்களையும், நோட்டுகளையும் போடுவதுங் கிடையாது; போடப்போவதுங் கிடையாது. உழைத்தால் ஊதியம் பெறலாம்; தனவந்தராகலாம்.

உழைப்பதற்குத் திடகாத்திரம் வேண்டும். திடகாத்திரத்திற்குத் தேகாப்பியாசம் வேண்டும். திடகாத்திர மில்லாதவர்களிடத்தில் சுறுசுறுப்பிராது. சோம்பல் குடிகொள்ளும். வேலை செய்ய மனங்கொள்ளாது. ஆகவே திடகாத்திரத்திற்குத் தேகாப்பியாசம் செய்து வரவேண்டும். முக்கியமாக நமது ஐங்காலத் தொழுகை தேகாப்பியாச அடிப்படையில் அமைக்கப்பட் டிருக்கிறது. இதிலிருந்து தேகாப்பியாசம் எத்தகைய தென்று தெரிந்து கொள்ளலாம். ஆங்காங்கு, தேகாப்பியாசம் செய்வதற்குரிய தாலீம்கானாக்களை ஸ்தாபித்து தேகாப்பியாசம் செய்துகொண்டு வந்தால்

திடகாத்திர முண்டாகும், திடகாத்திரத்தினால் உற்சாகமும் சுறுசுறுப்பு முண்டாகும். செய்யக் கோரும் காரியங்களைச் சுறுசுறுப்பாகச் செய்து முடிக்கலாம். காரியங்களைச் சுறுசுறுப்பாகச் செய்தால் அதிக லாபங்கிடைக்கும். நாம் ஒரு முயற்சியும் செய்யாமல் ஆண்டவன் கொடுப்பான் என்றால் எப்படிக் கொடுப்பான். ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாகச் சுற்றிக்கொண்டு வருபவர்கள் பணமுள்ளவர்களிடம் கடன்கேட்டால் கொடுப்பார்களா? ஒருக்காலும் கொடுக்கமாட்டார்கள். தொழிலில் ஈடுபட்டு உழைப்பவர்கள் கடன் கேட்டால் கட்டாயம் கொடுத்துதவுவார்கள். அதேபோல் தொழிலில் ஈடுபட்டு உழைத்துக்கொண்டே ஆண்டவனிடம் மன்றாடினால் அவன் கட்டாயம் உதவி செய்வான். சும்மா இருந்துகொண்டு ஆண்டவன் கொடுப்பான் என்று எதிர்பார்ப்பது மதியீனம்.

நாம் செய்ய வேண்டியவை.

தற்காலை உலகம் மிக்க மாறுதலடைந்துகொண்டு வருகிறது. அதற்குத்தக்கவாறு நம் சமுதாயத்தையும் சீர்திருத்தியமைக்க வேண்டும். மார்க்கத்திற்கு விரோதமான மூடப்பழக்க வழக்கங்களிலும், அனுசாரச் சடங்குகளிலும் ஆடம்பரத்திலும் மூழ்கித் தத்தளிக்கும் நம் சமுதாயம் கரையேற வேண்டும். பொருளில்லாதவர்களுக்கு இவ்வுலகவாழ்க்கை சாத்யமல்ல. இவ்வுலகமே பொருள்மயமாகப் பிரகாசிக்கிறது. உலகத்தில் கண்ணியமாக வாழக்கருதும் ஒவ்வொருவரும் பொருளைச் சம்பாதித்து, தனவந்தராக வேண்டும். தனவந்தராவதற்கு இந்நூலில் சொல்லப்பட்டிருக்கும் முறைகளை அநுஷ்டித்து நடக்கவேண்டும். தத்தம் நண்பர்களையும் அநுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். ஆங்காங்குக் கூட்டங்களைக் கூட்ட வேண்டும். மக்களுக்கு இதை எடுத்துப் போதிக்கவேண்டும். நம் சமுதாயம் பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டும். நாமனைவரும் வாழவேண்டும்.

வாழ்க! நம் சமுதாயம் நீடூழி வாழ்க !!

IBRAHEM PRESS, Triplicane—Q.H. No. 261—1-1-47

LIBRARY

இல்முல் அஸ்ரார்

எனும் இரஹஸ்ய சாஸ்திர சிந்தாமணி

ஸ்திரீ புருடர் மணந்து வாழ்வதன் இரகசியங்கள், கொக்கோக நுட்பங்கள், ஸ்திரீ புருடஜாதி விபரங்கள், காமத்தைப்பற்றிய முழு விபரங்கள், தாதுவைப்பற்றிய விளக்கங்கள், கருத்தரிக்கும் விஷயங்கள் யாவும் பொதிந்துள்ளது. இல்வாழ்க்கை நடத்தும் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையான நூல்.

விலை அணா 12.

ஷீரீன்—பர்ஹாத்

பர்ஹாத் என்பவன் குஷ்ரு பாஷாவின் மனைவியின் மீது காதலுற்று ஏக்கம் பிடித்து எப்பொழுதும் அவள் நாமத்தையே உச்சரித்துக் கொண்டு திரிந்ததை கேள்வியுற்ற பாதுஷா, ஒரு நிபந்தனையின் மீது ஷீரீனை கொடுப்பதாகச் சொல்லி, வாக்குமாறி அவனை ஏமாற்றி தற்கொலை புரிந்து கொள்ளும்படி செய்தது இது விஷயம் ஷீரீனுக்குத் தெரிந்து பாதுஷாவை வெறுத்தது முதலிய விஷயங்களடங்கியது இதில் பல உர்து பாட்டுகளும் அதற்கு அர்த்தமும் எழுதப்பட்டிருக்கின்றன.

விலை அணா 2

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

நவீன முஸ்லிம் புக் டிபோ,

இப்ராஹீம் பிரஸ்

571/H, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

நவீன முஸ்லிம்

(முஸ்லிம் சமூகச் சீர்திருத்தம்)

கல்வி, கலை, பொருளாதாரம் முதலிய துறைகளில் பிற்போக்கடைந்திருக்கும் முஸ்லிம் சமூகம் செழிப்புற்றோங்குவதற்குரிய மார்க்கங்களும் இதர சமூகங்களைப் போல் நம் சமூகமும் சீர் திருத்தமடைய வேண்டியதற்குரிய விஷயங்களும் முஸ்லிம்கள் அன்னியர்கள் முன் தலை வணங்காது கண்ணியமாய் வாழ்வதற்குரிய வழிகளும் யாவருக்கும் விளங்கும்படி எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் அவசியம் வாசிக்கவேண்டிய நூல் இது. முற்பதிப்பை விட இப்பதிப்பில் சில விஷயங்கள் அதிகமாகச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

விலை அணா 8.

மகிழ்மணி மாலை.

சிங்கப்பூர் க. மு. முஹம்மது முஹியித்தீன் புலவரவர்களால் இயற்றியது.

—:O:—

இஃது தௌஹீதைப்பற்றி மிகவும் விளக்கமாக பாடப்பட்டிருக்கிறது. இது ஓர் அருமையான ஞான பொக்கிஷம்.

விலை அணா 8

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

ப. முஹைறதீன் பிச்சை சாஹிபு & ஸன்ஸ்

புத்தக வியாபாரம்

88, செட்டித் தெரு, கொழும்பு.